## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.33/2018

DW–1 ரத்தீஸ்குமார் நாள்.23.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என் மனைவி அரசுபள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். நான் வழக்கு சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்னர் வில்லங்கம்போட்டு பார்த்தேன். ஒருசொத்தை கிரயம் வாங்குவதற்கு சுமார் 60 ஆண்டுகளுக்கு வில்லங்கம் போட்டு பார்க்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.13/2பி1ஏ ஆகும். 4, 5 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.13/2பி6டி என்று நினைக்கிறேன். சரியாக தெரியவில்லை. நான் வாங்கிய சொத்திற்கும், 4, 5 பிரதிவாதிகள் வாங்கிய சொத்திற்கும் வெவ்வேறு சர்வே நம்பர்கள் என்றால், வெவ்வேறு சர்வே நம்பர்கள் தான். ஆனால் ஒரே இடமாகும். கிரயம் வாங்கிய பின்னர் நான் இடத்தை அளந்தேன். நாங்கள் தான் அளந்தோம். அதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். முறையாக சர்வே செய்வதற்கு அரசு அலுவலகத்தில் பணம் செலுத்தி சர்வே ஆவணங்களின் படி இடத்தை அளக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணம் யாருக்கு யார் வழங்கினார்கள் என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரிதான். அது வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து நில அபகரிப்பு பிரிவு ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட ஆவணத்தின் நகலாகும். அந்த ஆவணத்தை நான் எப்படி பெற்றேன் என்று நான் நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ல் சர்வே எண்.13/2பி1 என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். வாதி அரசு பணியில் இல்லை. வாதியின் கணவர் அரசு பணியில் இருந்தார். தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். பி.வா.சா.ஆ. 3ல் சர்வே எண்.13/2பி1 என்று தான் உள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவு 21.07.2014ல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 கிரயபத்திரத்தில் கிரயம் ரூ.10லட்சம் என்றும், மார்க்கெட் மதிப்பு ரூ.10,77,650/– என்று

குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அரசுபணியில் இருப்பவர்கள் ரூ.10லட்சத்திற்கு சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு முன்அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். எங்கள் அலுவகத்தில் கிரயம் பெற்ற பின்னரும் அனுமதி பெறலாம். அவ்வாறு அனுமதி பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.5ல் சொத்துவிவரத்தில் சர்வேஎண்.13/2பி திட்டம் ஏக்கர் 2.00 என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6லும் பி.வா.சா.ஆ.5 ல் கண்ட விவரம்படியே சொத்து விவரம் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7ல் சொத்துவிவரத்தில் சர்வே எண்.13/2பி ஏக்கர் 2 என்று உள்ளது என்றால் சரிதான். நடேசன் மகன் சுப்ரமணியனுக்கு ஒரு ஏக்கர் 18 1/2 செண்ட் பாத்தியப்பட்டு இருந்தது. இந்த விவரம் எதன்மூலம் தெரிந்துகொண்டேன் என்றால் பிரச்சனை ஆனபின்பு ஒவ்வொரு ஆவணமாக சரிபார்க்கும்போது தெரியவந்தது. அவருக்கு மேற்படி விஸ்தீர்ணம் பாத்தியப்பட்டு இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.1 ஆகும். சொத்து பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வில்லங்கம் பார்த்ததில் பொன்னம்மாள் பெயர் வந்தது. அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை. நான் சரிபார்த்த வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. நடேசன் மகன் சுப்ரமணியன் 1981ல் அவர் மகனுக்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தை பொறுத்து நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.16 புகாரில் எங்கள் பணத்தை மீட்டுகொடுக்குமாறு கூறியுள்ளேன் என்றால் சரிதான். பணத்தை கேட்டு நான் பரிகாரம் இந்த வழக்கில் கோரவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13ல் 4, 5 பிரதிவாதிகள் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அதில் சர்வே எண்.13/2பி1ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். பி.வா.சா.ஆ.15பட்டாவில் 4, 5 பிரதிவாதிகள் பெயர் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வாதி மற்றும்

1,2 பிரதிவாதிகள் பெயர் இல்லை என்றால் சரிதான். அதன் சர்வே எண்கள்.13/2பி6சி1ஏ மற்றும் 13/6பி6சி3 ஆகும். எங்கள் பெயரில் உள்ள கணினி பட்டாவில் 4, 5 பிரதிவாதிகள் பெயர் இல்லையென்றும் அவர்கள் தொந்தரவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இதுசம்மந்தமாக வருவாய்துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை. அது என் கைவசம் உள்ளது. 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக வருவாய்துறையிலோ அல்லது வேறு துறையிலோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை. மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் அவர்கள் பெயரை குறிப்பிட்டுள்ளேன். 4, 5 பிரதிவாதிகள் எங்களை தொந்தரவு செய்ததாக அதில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.16 மற்றும் 17புகாரில் 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக அவர்கள் தொந்தரவு செய்ததாக கூறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18ல் வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு அழிக்கப்பட்டுவிட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பி.வா.சா.ஆ.19ஆக தாக்கல் செய்தேன் என்றால்சரிதான். அந்த ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்று நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த உத்தரவில் 4, 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து வேறு மற்றும் வாதியின் சர்வே எண் வேறு என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் கணவர் அரசுபணியிலும் நாங்கள் அரசு பணியிலும் இருப்பதால் நிலஅபகரிப்பு பிரிவு மூலம் பிரச்சனை தீர்க்கமுடியததால் எங்கள் மீது வழக்கு பாய்ந்துவிடும் என்பதால் வாதியை இந்த வழக்கு தாக்கல்செய்ய நாங்கள் தான் தூண்டிவிட்டோம் என்றால் சரியல்ல. உண்மையில் நாங்கள் ஏமாந்திருந்தால் நாங்கள் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. நடேசன் மகன் செல்வராஜ் அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தை 4, 5 பிரதிவாதிகள் மட்டுமன்றி வேறு நபர்களுக்கும் கிரயம்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம்

காட்டப்படும் வில்லங்க சான்றை அவ்வாறு செல்வராஜ் 2007, 2009 ஆண்டுகளில் சொத்தை விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் செல்வராஜ்க்கு பாத்தியம் இல்லைஎன்று நிருபணவாக்குமூலத்தில் தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்தை முறையாக சர்வே செய்து அளக்காமல் 4, 5 பிரதிவாதிகளின் சொத்தை பொறுத்து இடைஞ்சல் செய்யும் விதமாக அவர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும், உண்மையில் 4, 5 பிரதிவாதிகளால் பிரச்சனை இருந்திருந்தால் வாதிதான் வழக்கில் சேர்த்திருப்பார் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளின் சொத்திற்கும் என்னுடைய சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 09.03.2010தேதியிட்ட கணினி சிட்டாவில் செல்வராஜிடம் கிரயம் பெற்ற 4, 5 பிரதிவாதிகளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கிரயதாரார் சரோஜா பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அதற்கு முந்தைய பாத்தியஸ்தர் துரைசாமி உடையார் மகன் சுப்ரமணியன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சர்வே எண்.13/2பி6 என்று உள்ளது. 1987ல் சரோஜா சொத்தை கிரயம் வாங்கிவிட்டார். கிரயத்திற்கு பின்னர் அவர் பெயர் பட்டாவில் வரவில்லை என்றால் சரிதான். சர்வேஎண்.13/2பி6ல் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், 13/2பி6 என்பதும் 13/2பி1என்பதும் வெவ்வேறு சொத்துக்ள் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடம் 13/2பி1ல் உள்ளது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை:</u>

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.